பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 05 வெள்ளிக்கிழமை 19.01.2024 கதிர் 432

# பதில் பொலிஸ் மா அதிபருக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனு

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. முஜிபுர் ரஹ்மான் தாக்கல்



பதில் பொலிஸ் மா அதிபர் பதவிக்கு தேசபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டதை எதிர்த்து ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உயர் நீதி மன்றத்தில் அடிப்படை ☞2

## இனிது ரகசியம் அல்ல!

இந்த வருட பிற்பகுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பான யோசனை ஒன்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியால் முன்வைக்கப்பட்டது. வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனும் அந்த யோசனையை ஆதரித்திருந்தார். அந்தப் பொது வேட்பாளராகத் தாமே போட்டியிடுவதற்கும்கூட தயார் என்று அவர் அறிவித்திருந்தார்.

தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து இந்த யோசனைக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்று ஜனநாயகக் கூட்டணி ☞2

# அரங்கக் கலைகளை வகைப்படுத்தச் சட்டம்

## வரைவு ஜனாதிபதியின் செயலரிடம்

பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம் மற்றும் ஆக்கப்பூர்வ உரிமைகளை பாதுகாப்பதை அடிப்படையாகக் கொண்டு பொது அரங்கக் கலை வகைப்படுத்தல் சட்ட வரைவு ஜனாதிபதி ரணில் ☞2

# தமிழர்களின் இருப்பை தக்கவைக்க தமிழ்க் கட்சிகள் ஒரே குடையின் கீழ்

## இணையவேண்டும் என்கிறார் கருணா அம்மான்

தமிழ் மக்களின் இருப்பைத் தக்கவைக்க வேண்டுமெனில் தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் அணிதிரண்டு, தமிழ்மக்களுக்காககுரல் கொடுக்கவேண்டுமென ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கல்லடியில் தமிழ் ஐக்கிய சுதந்திர முன்னணி கட்சியின் தலைமை அலுவலகத்தை நேற்று திறந்து வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

எமது கட்சி ஆரம்பிக்கப்பட்டு 7 வருடங்கள் நிறைவடைந் ☞2

## யுக்திய நடவடிக்கை மூலம்

# ஒரு மாத காலத்தில் 62 சதவீத போதைக் குற்றவாளிகள் கைது

போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்களில் 62 சதவீதமானவர்களே ஒருமாதநிறைவில்கைது என்று பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

யுக்கதிய சுற்றிவளைப்பு தொடங்கப்பட்டு ஒருமாதம் நிறைவடைந் தமையை முன்னிட்டு, களனியில் சர்வமத வழிபாடுகள் நேற்று நடைபெற்றன. அதில் பங்கேற்றதன் பின்னர் செய்தியாளர் ☞2



## இனி இது .....

வலியுறுத்தியிருந்தது. ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அந்த யோசனையை நிராகரித்துவிட்டது. பதிலாக ஜனாதிபதித் தேர்தலை நிராகரிப்பதே தமிழ் மக்களுக்குச் சிறந்த தெரிவு என்று அந்தக் கட்சி கூறிவிட்டது. தலைமைப் போட்டியில் 'பிஸி'யாக இருக்கும் தமிழ் அரசுக் கட்சி அந்த யோசனை பற்றி ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

தமிழ்க் கட்சிகளின் நிலை இப்படி இருக்கின்றதென்றால் இந்தத் தமிழ்ப் பொது வேட்பாளர் யோசனை தெற்கில் உள்ள சிங்களக் கட்சிகளிடமும் எந்தவிதச் சலனத்தையும் ஏற்படுத்தவில்லை என்கின்றன அரசியல் வட்டாரங்கள். இந்த யோசனை குறித்து ஆளும் தரப்பிலும் எதிர்க்கட்சித் தரப்பிலும் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்ததன் மூ-லம் அந்தந்தக் கட்சிகளைச் சேர்ந்த ஒரு சிலர் எதிர்வினையாற்றியதைத் தவிர வேறு எந்த வகையிலும் இந்த யோசனை தெற்கின் அரசியல் கட்சிகளிடம் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியோ ஐக்கிய மக்கள் சக்தியோ இது பற்றி அலட்டிக்கொள்ளவேயில்லை. பொது ஜன பெரமுன வழக்கமாகவே தமிழர்களின் பிர்சினைகள் தேவைகள் குறித்து அக்கறைப்படாது. ஜேவிபியோ தமிழர்கள் தம்மை ஆதரிக்க வேண்டும் என்று கேட்குமே தவிர, வேறு எந்தவொரு இணக்கத்திற்கோ பேரம்பேசல்களுக்கோ வராது. இப்படிப்பட்ட நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்கிற யோசனை அரசியல் களத்தில் எதிர்பார்த்த அதிர்வுகளை ஏற்படுத்தி தமிழர்களுக்குச் சாதகமான நிலையை ஏற்படுத்தும் சூழல் ஏதும் இல்லை என்கினறன அரசியல் வட்டாரங்கள்.

ஏற்கனவே சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டதைப் போன்ற வேடிக்கை வினோத நடவடிக்கைதான் என்பதற்கு அப்பால் இந்த யோசனைக்கு காத்திரமான மதிப்பைக் கொடுப்பதற்கு யாருமே தயாரில்லை என்பதுதான் நிலமை. தமிழ்க்கட்சிகள் இந்த யோசனையை முன்வைத்தமைக்குப் பிரதான காரணம் சிங்களக் கட்சிகளுடனான பேரம் பேசல் சக்தியை அதிகரிக்க முடியும் என்பதே. ஆனால் நினைத்தபடி காரியம் எதுவும் நகர்வதாகத் தெரியவில்லை.

எனவே இனி மாற்று வழிக்கு மாற்று வழி கண்டுபிடிக்க வேண்டிய இக்கட்டு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன தமிழ்க் கட்சிகள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

# பல்கலைக் மாணவர்கள் பொலிஸாருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சென்று முறைப்பாட்டை நேற்றுப் பதிவு செய்தனர்.

இதுகுறித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் மதுஷான்சந்திரஜித் தெரிவித்ததாவது;

நாம் அரசமைப்பில் உள்ள ஏற்பாட்டுக்கு அமைவாகவே போராட்டத்தினை முன்னெடுத்தோம். ஆனால் அதற்கான எந்தவொரு அனுமதியையும் வழங்காது ரணில் விக்கிரமசிங்க ஆட்சி அராஜகமாக எமது ஜனநாயக போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தியது.

அதற்கு எதிராக நாம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முறைப்பாட்டைச் செய்துள்ளோம். ரணில் விக்கிரமசிங்க பதவி ஏற்ற நாள் முதல் பொதுமக்களின் கருத்து வெளியிடும் சுதந்திரத்தினை மறுக்கின்றார். மக்களின் தலைகள் உடையும் வரையில் தாக்குதல் நடத்துகின்றார்.

மாணவர்களை இலக்குவைத்து கண்ணீர்ப்புகைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்படுகின்றது. இதனால் எமது போராட்டத்தின்போது அதிகளவான மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆகவே அவர் இந்த விடயங்களை நிறுத்தாது விட்டால் நாம் போராட்டத்தினை கைவிடப்போவதில்லை என்றார்.

## பதில் பொலிஸ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

தென்னக்கோன் பிரதிப் பொலிஸ் மா அதிபராகப் பணியாற்றிய போது, 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலுக்கு முன்னதாக தாக்குதல்கள் குறித்த முன்னறிவிப்புச் செய்யாமை, 2022 இல் காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதலின்போது அவருக்கு முன்னறிவிப்பு கிடைத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்காது, பொறுப்புகளை நிறைவேற்றத் தவறியமை உள்ளிட்ட விடயங்களை தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார் முஜிபுர் ரஹ்மான்.

தேசபந்து தென்னகோன் தான் வகித்த பதவிகளுடன் தொடர்புடைய பொறுப்புகளை நிறைவேற்ற இயலாமையை அந்த நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன என்றும் அப்படிப்பட்ட தென்னகோனை நிரந்தரமாக இலங்கையின் பொலிஸ் மா அதிபராக நியமிக்க முயற்சித்தால் அது சட்டத்தின் மீது நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசபந்து தென்னகோனை நிரந்தர பொலிஸ் மா அதிபராக நியமிக்க ஜனாதிபதி எடுக்கும் எந்தவொரு நடவடிக்கையும் அரசமைப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைத் தொடர்ச்சியாக மீறுவதாக அமையும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேசபந்து தென்னக்கோனை நிரந்தரமாக பொலிஸ் மா அதிபராக நியமிப்பதற்கு அரசமைப்பு பேரவை அனுமதி வழங்கினால், அவர்களின் செயற்பாடுகளும் அரசமைப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை தொடர்ச்சியாக மீறுவதாக அமையும். ஆகவே தேசபந்து தென்னகோனை பதில் பொலிஸ் மா அதிபராக நியமிப்பதற்கு ஜனாதிபதியினால் பரிந்துரைக்கப்பட்டமை அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என்று உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டி கட்டளையிடுமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

முஜிபுர்ரஹ்மான் தனது மனுவில் தேசபந்து தென்னகோன் பதில் பொலிஸ் மா அதிபர் பதவியை ஏற்பதற்கும், நீடிப்பதற்கும் மனுவின் விசாரணை மற்றும் இறுதித் தீர்மானம் எடுக்கும் வரை இடைக்கால தடை விதிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.=

அத்தோடு, பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னகோனை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கு அனுமதி வழங்குவதை தடுக்கும் வகையில் அரசியலமைப்பு பேரவைக்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் தென்னக்கோனின் தற்காலிக நியமனத்தை விசாரணை செய்து மனுவின் இறுதித் தீர்மானம் வரும் வரை அவர் எந்தப் பதவியை வகிப்பதையும் தடுக்க உத்தரவிடுமாறும் மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளதோடு தேசபந்து தென்னகோன், சட்டமா அதிபர் மற்றும் அரசியலமைப்பு பேரவை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளதுடன் கடந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலில் எட்டு ஆசனங்களைப் பெற்றோம், அம்பாறை மாவட்டத்தில் நாடாளுமன்ற தேர்தலில் 30 ஆயிரத்துக்கு மேற்பட் வாக்குகளை பெற்று 72 வருட வரலாற்றில் தமிழ் தேசிய கூட்டமைப்பை தோற்கடித்த பெருமையை நிரூபித்துக் காட்டினோம்.

அம்பாறை மாவட்ட மக்களே கட்சிக்கு அத்திவாரம் இட்டவர்கள், அவர்களின் ஆதரவை ஒருபோதும் மறக்கமாட்டேன். அடுத்த தேர்தலில் யாருடன் இணைந்து செயற்பட வேண்டும் என்பதை மத்திய குழுவாக கூடி நாங்கள் முடிவு எடுப்போம்.

அதேவேளை சிறந்த கூட்டணிகள் தமிழ் தரப்பில் இருந்து வருமாயின் அதனுடன் சேர்ந்து தேர்தலில் போட்டியிட நாம் தயாராக இருக்கின்றோம்.

எமது மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்களின் தேவைகளை செயற்படுத்தி வளங்களைக் கொண்டுவருதற்கு முயற்சிக்காமல் அங்கு மிகவும் அநாகரிகமான முறையில் நடந்துகொள்கின்றனர். கூச்சலிடுவதும் தனிப்பட்ட குரோதங்களை விவாதிப்பதற்கான களமாக நாடாளுமன்றத்தை பயன்படுத்துவதுமாக இருக்கின்றனர்.

நாங்கள் கட்சியை ஆரம்பித்து தனித்துவமாக செயல்பட்டு இருக்கிறோம். ஒருபோதும் மொட்டு கட்சியுடன் சேர்ந்து எதிர்காலத்தில் பயணிக்கும் நோக்கம் எமக்கு இல்லை. ஜனாதிபதி உட்பட அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சந்தித்திருக்கிறோம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு என்பது தமிழர்களுடைய பாரம்பரிய கட்சி, அது உண்மையிலேயே விடுதலைப் புலிகளின் தலைமையால் ஒருங்கிணைக்கப்பட்டு 22 ஆசனங்களை பெற்ற வரலாறுகள் இருக்கின்றன. ஆனால் தற்போது இருக்கின்ற தலைமைத்துவங்கள் பலவீனமானவையாக உள்ளமையால் அக்கட்சி உடைந்து கொண்டிருக்கிறது, மக்களும் இன்று அக்கட்சியை நிராகரித்துக் கொண்டிருக்கின்றார்கள், அவர்களது செயற்பாடுகளை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றார்.

## ஒரு மாத ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் பேசிய பதில் பொலிஸ் மா அதிபர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்களில் 62 சதவீதமானவர்களே ஒருமாத நிறைவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஏனையவர்களை இலக்கு வைத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இதனை நிறுத்தப்போவதில்லை. போதைப்பொருள் கடத்தல்காரர்களைப் பாதுகாப்பதற்கு வேறு சிலர் களத்தில் இறங்குவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

எவ்வாறாயினும், நாம் போதைப் பொருள் கடத்தல்களுக்கும், வியாபரத்துக்கும் இடமளிக்கப் போவதில்லை. அத்துடன் சர்வதேசத்தில் இருந்து போதைப்பொருளை கடத்துபவர்களையும், வியாபாரம்செய்பவர்களையும் கண்டறிவதற்கும் கைது செய்வதற்கும் புலனாய்வாளர்களும், போதைப்பொருள் தடுப்பு பிரிவும் கூட்டிணைந்து தனியான செயற்றிட்டத்தினைத் தொடங்கியுள்ளன - என்றார்.

## அரங்கக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் குழுவினால் அண்மையில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த புதிய வரைவை தயாரிப்பதற்காக தணிக்கை சபையின் முன்னாள் தலைவர் சமன் அதாவுதஹெட்டி தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவில் திரைப் படவியலாளர் அசோக ஹாதகம, நாடகக்கலைஞர் ராஜிததிஸாநாயக்க, படைப்பாளர் அனோமா ராஜகருணா மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஜகத் விக்கிரமநாயக்க ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

திரைப்படம், நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினருடன் கலந்தாலோசித்து புதிய சர்வதேச போக்குகள் மற்றும் தரநிலைகளுக்கு ஏற்ப இந்த வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள 1912 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பொது அரங்கேற்றக்கலைகட்டளைச் சட்டத்தினை ஆராய்ந்து இந்த புதிய சட்டத்தை செயல்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சட்டத்தின் ஊடாக கலைப் படைப்புகள் தொடர்பில் எழுந்துள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இச்சட்டத்தின் மூலம் படைப்பு சுதந்திரம் முழுமையாக பாதுகாக்கப்படும் எனவும் குழுவின் தலைவர் சமன் அதாவுதஹெட்டி தெரிவித்தார்.

## சிறீ ஜயவர்த்தனபுரவில்
# பல்கலைக் கல்வி சாரா ஊழியர்களின் போராட்டம் மீதும் பொலிஸார் தாக்குதல்



சிறீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் நேற்று முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கை மீதும் பொலிஸார் கண்ணீர்ப்புகைக்குண்டுத்தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதற்கு முதல் நாளான புதன் கிழமை சிறீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முன்பாக மாணவர்கள் நடத்திய போராட்டத்தின் மீதும் பொலிஸார் தண்ணீர் தாரை மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

நேற்று ஆர்ப்பாட்டக்காரர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இருந்து விஜேராம சந்தி வரை பேரணியாக செல்ல முற்பட்ட வேளையிலேயே பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுத் தாக்குதல் நடத்தி அவர்களைக் கலைத்தனர்.

கலந்து செல்லுமாறு பொலிஸார் அறிவித்தபோது பொலிஸாருக்கும் சேர்த்தே தாங்கள் போராடுகின்றனர் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டார்கள். இதனையடுத்து இருதரப்பினருக்கும் இடையே வாய்த் தர்க்கம் ஏற்பட்டு அமைதியின்மை உருவெடுத்தது.

இதனையடுத்து உடனடியாகப் பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதலை நடத்தினர். ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து செல்லும் வரையில் தொடர்ச்சியாக கடுமையான எச்சரிக்கைவிடுத்தனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம், ஒலுவில், பேராதானை, உள்ளிட்ட பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் கல்விசார ஊழியர்கள் நேற்று சம நேரத்தில் கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தனர். பணிப்புறக்கணிப்பிலும் ஈடுபட்டிருந்தனர்.



# இன, மத வாதம் தூண்டி மக்களின் மனநிலையை மாற்றி அரசை வீழ்த்தியதால் மக்கள் இன்று கஷ்டப்படுகின்றனர்

## அகிலவிராஜ் சுட்டிக்காட்டு



இனவாத, மதவாதத்தைத் தூண்டிக் கொண்டு மக்களின் மன நிலைமையை மாற்றி ஆட்சியை வீழ்த்தியதால் மக்கள் இன்று கஷ்டப்படுகின்றனர் என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட சம்மேளனக் கூட்டம் இரத்தினபுரி மாகாணசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

1977 இல் இந்த நாட்டை வீழ்ச்சியடையச் செய்யும்போது, இந்த நாட்டுக்கு திறந்த பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தி, நாட்டின் இளைஞர் சமூகத்துக்கு உலகத்தைக் காட்டி, பொருளாதார இலக்கொன்றை சமர்ப்பித்தது ஐக்கிய தேசியக் கட்சியாகும்.

2001 ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து மறை பெறுமானத்தில் இருக்கும்போது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு விமான நிலையங்கள் செயலிழந்திருந்த சந்தர்ப்பத்தில் நாட்டின் பொருளாதாரத்தை நேர் பெறுமானத்துக்கு கொண்டுவரும் போது, நாட்டுப்பற்றாளர்கள் என சொல்லிக்கொண்டிருக்கும் குழு அந்த அரசாங்கத்தை வீழ்த்த நடவடிக்கை எடுத்தது.

அத்துடன் 2014 இல் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்த வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது? நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து மறை பெறுமானத்துக்கு செல்லும்போது, அதில் இருந்து தப்பிக்கொள்ளவே ஜனாதிபதி தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அத்துடன் மீண்டும் போராட்டங்கள் இடம்பெறுவதும் அன்று ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்து நாட்டை அபிவிருத்தி செய்ய மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த மேற்கொண்ட நடவடிக்கையே தற்போதும் ஆரம்பிக்கப்படுகிறது.

மக்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். நல்லாட்சி அரசாங்க காலத்தில் ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்த வேலைத்திட்டங்களை இறுதிவரை கொண்டுசெல்ல முடிந்திருந்தால், இன்று நாடு இந்த நிலைக்கு வந்திருக்காது என்றாலும் அந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க எமக்கு இடமளிக்கவில்லை.

இனவாத, மதவாதத்தைத் தூண்டிக் கொண்டு மக்களின் மன நிலைமையை மாற்றி அரசாங்கத்தை வீழ்த்தியதால் மக்கள் இன்று கஷ்டப்படுகின்றனர்.

தேர்தலில் நாங்கள் தோல்வியுற்றாலும் நாடாளுமன்றத்தில் ஓர் ஆசனம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எமது கொள்கையில் மாற்றம் இல்லை அவ்வாறு கொள்கையை மதிக்கின்ற தலைவர் ஒருவர் இருக்கின்ற கட்சி என்றவகையில் நாங்கள் பெருமை அடைகிறோம்.

அத்துடன் கற்பனைக் கதை சொல்லும் அரசியல்வாதிகள் பலரும் இருந்தார்கள் என்றாலும் அவர்கள் யாரும் நாட்டைப் பொறுப்பேற்க முன்வரவில்லை.

இன்று அரசியல் பிரச்சினை இல்லை. பொருளாதாரப் பிரச்சினையே இருக்கிறது. அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தேவையான அளவு தலைவர்கள் இருக்கின்றார்கள்.

ஆனால் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமாக இருப்பது. உலக நாடுகள் தொடர்பாக அறிவு, அரசியல் அனுபவத்துடன் பொருளாதார சிந்தனை உள்ள தலைவருக்காகும். அந்த அனைத்துத் தகுதியும் உள்ள தலைவரே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க இலங்கையில் அரசியல் அனுபவம் திறமைகள் உள்ள ஒரு தலைவர் ரணில் விக்ரமசிங்கவைத் தவிர தெரிந்தளவில் வேறு யாரும் இல்லை. ரணில் விக்ரமசிங்கவே எமது இறுதி மாற்றுவழி என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

எனவே தொடர்ந்தும் நிவாரண வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றும் அரசியல் தற்போது முடிவுக்கு வந்துள்ளது. ஆட்சிக்கு வந்தால், நிவாரணங்களை வழங்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

ஆனால் அதனை எவ்வாறு வழங்குவது என தெரிவிப்பதில்லை. அதனால் கற்பனை கதைகளை சொல்லி மக்களை ஏமாற்றி அரசியல் செய்யும் கலாசாரத்தை நாங்கள் மாற்றியமைக்க வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சி எப்போதும் உண்மை நிலையைத் தெரிவித்தே ஆட்சிக்கு வந்திருக்கிறது. அதனால் பொய் வாக்குறுதி அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சி மனிதநேயக் கட்சியாகும். அதனால் மக்களின் பிரச்சினைக்கு உண்மையாகத் தீர்வுகாண முடியுமான கட்சி ஐக்கிய தேசியக் கட்சியாகும். அதனால் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப இருக்கும் ஒரே தலைவர் ரணில் விக்ரமசிங்கவாவார். அவருக்கு ஆதரவளிக்க அனைவரும் அணிதிரள வேண்டும். - என்றார். (05)

# சூரியகாந்தி எண்ணெய் ரஷ்யாவால் அன்பளிப்பு

ரஷ்ய அரசாங்கத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்ச்சியான ஒத்துழைப்பைப் பிரதிபலிக்கும் வகையில், ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தின் மூலம் ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சூரியகாந்தி எண்ணெய் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள உலக உணவுத் திட்ட ஒத்துழைப்புத் தரப்பு செயலக வளாகத்தில் இலங்கை அரசாங்கத்திடம் இந்த நன்கொடை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

2023 டிசெம்பர் 30 ஆம் திகதி 117.3 மெற்றிக் தொன் சூரியகாந்தி எண்ணெயும், 2024 ஜனவரி 04 ஆம் திகதி 13.1 மெற்றிக் தொன் எண்ணெயும் ரஷ்ய அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டது, மேலும் மொத்த நன்கொடையான 130.41 மெட்ரிக் டொன் எண்ணெய் இலங்கை அரசாங்கத்துக்கு உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, இந்த வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக 351.9 மெற்றிக் தொன் சூரியகாந்தி எண்ணெய் ரஷ்ய அரசாங்கத்திடம் இருந்து 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 04 ஆம் திகதி இலங்கைக்கு வழங்கப்பட்டது.

அவசர பதிலளிப்புத் திட்டத்தின் கீழ் இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளது மற்றும் நாடு முழுவதும் உள்ள குறைந்த வருமானம் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு நேரடியாக இது சென்றடையும். குறிப்பாக மட்டக்களப்பு, நுவரெலியா மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள 8625 குடும்பங்கள் இதன் மூலம் பயனடைவார்கள்.

இலங்கையில் பொருளாதார சவால்களை எதிர்நோக்கும் மக்களின் அவசரத் தேவைகளை உணர்ந்து அவற்றிற்கு விரைவாகப் பதிலளிப்பதற்கான இந்தக் கூட்டு முயற்சி ரஷ்ய அரசாங்கத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான சர்வதேச உறவில் மிக முக்கியமான மைல்கல்லைக் குறிக்கிறது.

இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் லெவன் எஸ். தகயரான், உலக உணவுத் திட்டத்தின் இந்நாட்டுப் பணிப்பாளர் ஜெரார்ட் ரெபெலோ உள்ளிட்ட அதன் அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் வெர்னான் பெரேரா, வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் அமீர் அஜ்வாட், கொழும்பு உலக உணவுத் திட்ட ஒத்துழைப்புத் தரப்பு செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.எச்.ஏ.எம். ரிப்லான் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (05)

# கட்டுநாயக்கசென்ற தொடருந்து காரில் மோதி நான்கு பேர் காயம்



கொழும்பிலிருந்து பண்டாரநாயக்க கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு எரிபொருள் ஏற்றிச் சென்ற ரயில் குடஹகபொல உப ரயில்வே கடவையில் பாதுகாப்பற்ற முறையில் பயணித்த கார் ஒன்றை மோதியதில் நால்வர் காயமடைந்து சீதுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது காரில் நான்கு பேர் பயணித்துள்ளதுடன் நால்வரும் காயமடைந்து சீதுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# விவசாயத் துறையின் அபிவிருத்திக்கு 100 ட்ரோன் சாதனங்கள் கையளிப்பு



*விவசாயத் துறையின் நவீனமயமாக்கலுக்கான திட்டமாக 25 கோடி ரூபா பெறுமதியான 100 ட்ரோன் சாதனங்கள் விவசாய அபிவிருத்தி திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.*

*இந்தச் செயற்பாடு புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.*

*இந்த ட்ரோன் சாதனங்கள் திட்டத்தின் மூலம் பயிர்களுக்கு உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை விசுறுவதற்கு இலகுவாக பயன்படுத்த முடியும்.*

*இந்த ட்ரோன் சாதனங்கள் இயக்குவதற்கான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*அநுராதபுரம், குருநாகல், அம்பாந்தோட்டை, வவுனியா மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாய மத்திய நிலையங்களுக்கு இந்த ட்ரோன் சாதனங்கள் வழங்கப்படும்.*

*(05)*

# கடமையின்போது போதைப்பொருளைப் பாவித்த கிராம உத்தியோகத்தர் புதுக்குடியிருப்பில் கைது

புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள கிராம உத்தியோகத்தர் ஒருவர் கடமையின்போது ஹெரோயின் பயன்படுத்திய குற்றச்சாட்டில் புதன்கிழமை கைது செய்யப்பட்டார் என புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள்களை விற்பனை செய்கிறார் எனவும் இவற்றை அருந்தி விட்டு போதையில் கடமையாற்றுகிறார் எனவும் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது புதுக்குடியிருப்பு பொலிஸ் அதிகாரிகள் கிராம உத்தியோகத்தரைக் கைது செய்தனர்.

(05)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## செவிடன் காதில் ஊதிய சங்கு

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு வாழ் மக்களிடம் இருந்து கணிசமான எதிர்ப்பு இருந்தபோதும் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவை உருவாக்குவதில் ஆளும் தரப்பு உறுதியாக இருக்கின்றது. காலத்தை இழுத்தடித்து உலகத்தை ஏமாற்றும் கொழும்பின் வழக்கமான பாணியில் இந்த விடயத்தை ஆட்சியாளர்கள் கையாள்கின்றார்கள் என்பது வெள்ளிடைமலை.

ஆளும் தரப்பின் இந்த முயற்சி பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் பாதிப்பாகவே அமையப் போகின்றது என்று கடிந்துகொண்டிருக்கின்றது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு. அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியகடிதத்தில்அது இந்த உண்மையைச்சுட்டிக்காட்டியுள்ளது.

புதிதாக ஒரு ஆணைக்குழுவை நியமிப்பதற்கு முன்னர் ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் முன்வைத்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அது வலியுறுத்தியுள்ளது. இலங்கை ஆளும் தரப்புக்கள் தங்கள் சொந்த ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை மட்டுமல்ல ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளையும்கூட இதுவரை நடைமுறைப்படுத்தியதில்லை. இருந்தாலும் உலக நாடுகளை ஏமாற்றுவதற்காக மீண்டும் மீண்டும் ஆணைக் குழுக்களை நியமித்து வருகின்றது.

இந்த நிலையில்தான் ''இலங்கை ஆளும் தரப்பு மற்றுமொரு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை ஏற்படுத்துவதற்கு முன்னர் கடந்தகாலத்தில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும்" என இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழு தனது கடிதத்தில் முக்கியமாக 2010இல் உருவாக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் சுட்டிக்காட்டியுள்ளது.

"2011 நவம்பரில் இந்த ஆணைக்குழு வெளியிட்ட தனது இறுதி அறிக்கையில் பல பரிந்துரைகளை முன்வைத்தது. இந்தப் பரிந்துரைகள் கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் தோன்றிய பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானவர்களின் சாட்சியங்களை அடிப்படையாக கொண்டவை.

பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் தங்களின் பயங்கரமான அனுபவங்களை கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் பகிர்ந்துகொண்டனர். மேலும் தங்களின் முறைப்பாடுகளின் அடிப்படையில் வெளியான எல்எல் ஆர்சியின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்த்தனர். எனினும் இந்த பரிந்துரைகளில் பெருமளவானவை இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் தங்களின் அதிர்ச்சி தரும் அனுபவங்களை மீண்டும் ஒருமுறை பகிர்ந்துகொள்வதை கட்டாயமாக்கும்உண்மையைகண்டறியும்புதியஆணைக்குழுவிற்கு வளங்களை ஒதுக்குவதன் முன்னர் கடந்தகாலத்தின் உண்மையைகண்டறியும்ஆணைக்குழுக்களின்ஆக்கபூர்வமான பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்'' என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டசமூகங்களிற்குமீண்டும்பாதிப்புகளைஏற்படுத்தும் மற்றுமொரு பொறிமுறை உண்மையை கண்டறிவதற்கு உதவப்போவதில்லை என நாங்கள் கருதுகின்றோம். முன்னைய ஆணைக்குழுக்களால் உண்மைகள் ஏற்கனவே வெளிக்கொணரப்பட்டுள்ளன என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டிய நேரம் இது என்பதையும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழு உண்மையைச் சுட்டிக்காட்டியிருந்தபோதும் அது ஆளும் தரப்பைப் பொறுத்தவரையில் செவிடம் காதில் ஊதிய சங்கு போன்றே இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆணைக்குழு சுட்டிக்காட்டும் விடயங்கள் எதனையும் ஆளும் தரப்பினர் கணக்கில் எடுக்கப்போவதில்லைஎன்பதுதிண்ணம்.அவர்கள்உலகநாடுகளை ஏமாற்றுவதற்காகவும் காலத்தை இழுத்தடிப்பதற்காகவுமே இவ்வாறான ஆணைக்குழுக்களைத் தொடர்ந்து நியமித்து வருகின்றன.

தற்போதைய உண்மை அறியும் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கான சட்டமூலத்தில் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் அது யதார்த்தத்தில் நடக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆளும் தரப்பின் இந்தப் போக்கு மாறாத வரையில் இலங்கைக்கு விமோசனம் கிடையாது.

# எது அங்கீகாரம்?



**என் சத்திய மூர்த்தி**



தேர்தல் நேரம் என்றாலே, தென்னிலங்கை சிங்கள தலைவர்கள், தமிழர்களுக்கு அரசியல் தீர்வு குறித்து அரிச்சுவடி பாடம் எடுக்கத் தொடங்கி விடுவார்கள். அதிலும் குறிப்பாக ஓய்வுபெற்ற தலைவர்கள், பிறர் அனைவருக்கும் முன்னரே களத்தில் இறங்கிவிடுவார்கள். தேர்தல் நெருங்கும் வேளையில், தென்னிலங்கை ஊடகங்கள் அவர்களை கண்டுகொள்ளாது என்பதும் ஒரு காரணம்.

அண்மைக் காலம்வரை, அண்டை நாடான இந்தியாவில் இலங்கை தூதுவராக பணியாற்றியவர் முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொடா. அவர், நாட்டில் பொருளாதார பிரச்சினை தலைவிரித்தாடிய காலகட்டத்தில், இந்தியாவிடமிருந்து, உணவு, எரிபொருள், இரசாயன உரம் மற்றும் பணக்கடன் ஆகியவற்றை பெற்று தருவதில் முக்கிய பங்கு வகித்தவர்.

தூதுவராக பணி முடிந்து நாடு திரும்பி வந்த மிலிந்த முதலில் தென்னிலங்கையில் உள்ள பௌத்த மத தலைவர்களை சென்று தரிசித்து வந்தார். தற்போது, தனது கவனத்தை உள்நாட்டு அரசியல் பக்கம் திருப்பி உள்ளார். அதற்கு அவர் எடுத்துக்கொண்டுள்ள ஆயுதம், தமிழருக்கான அரசியல் தீர்வும், அதிலும் குறிப்பாக மாகாண சபை அமைப்பும்.

மொரகொடாவை பொறுத்தவரை, மாகாண சபைகள் இந்த நாட்டிற்கு தேவையற்றவை. அதிகமாக அரசுக்கு பணச்சுமையையும் ஏற்படுத்தும் அமைப்பு. அவரைப் பொறுத்தவரையில், மாகாண சபைகளை கலைத்துவிட்டு, அதற்கு பதிலாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்களை கொடுக்க வேண்டும் என்பதே அவரது வாதம். இதுவே அறதப் பழசான ஒரு வாதம்.

### வறட்டு கௌரவம்

மாகாண சபை என்பது தமிழர்களுக்கான அமைப்பு மட்டுமல்ல. மாறாக, அனைத்து இலங்கையர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வழிமுறை. அதன் செயல்பாட்டில் தவறுகள் இருக்கலாம், அவற்றிற்கான வரையறுக்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசு பிடுங்கிக்கொண்டிருக்கலாம். ஏன், வட மாகாண முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் போல கையில் கிடைத்த வாய்ப்பையும் தமிழர்களுக்கே உரிய வறட்டு கௌரவம் காரணமாக தவறவிட்டிருக்கலாம்.

ஆனால், இவற்றால் மட்டுமே மாகாண சபைகள் அவசியமில்லை என்று ஆகிவிடாது. இந்தியா- - இலங்கை ராஜீவ்- ஜெயவர்தனே உடன்பாடாகட்டும் அல்லது அதனை அடிப்படையாக கொண்ட சர்வதேச அரங்கில் ஜனநாயகம் குறித்து ஆராய்ந்து அறிந்துள்ளவர்கள் அனைவருமே மக்களாட்சி தத்துவத்தின் பயன்கள் அந்த மக்களைச் சரியான வகையில் சென்றடைய அடுக்குமுறையிலான அரச அமைப்புகளின் தேவையை வலியுறுத்தி உள்ளனர்.

மாறாக, மிலிந்த மொறகொடா போன்றோர் கூறுவது போல், மத்திய அரசு அடுத்தது அடிப்படை ஜனநாயக கருவிகளான உள்ளாட்சி போன்ற அமைப்புகள் மூலம் மக்களின் அடிப்படை தேவைகள் நல்ல முறையில் சென்றடையலாம் என்பது அபத்தமான வாதம். அவ்வாறு மக்களுக்கு உணவு, உடை, உறைவிடம் ஆகியவை கிடைத்துவிட்டது என்றே வைத்துக்கொள்ளுங்கள். அது அடிமைத் தளத்தின் அடையாளமே.

அவ்வாறான அரசமைப்பை அன்பான அல்லது கருணை மனமுள்ள எதேச்சாதிகாரம், சர்வாதிகாரம் என்றுகூடக் கூறிக்கொள்ளலாம். அந்த மக்கள் பலிகொடுப்பதற்காக, இலை-தழை போட்டு வளர்க்கப்படும் ஆடுகள் மட்டுமே. அடுத்த கட்டத்தில் அவர்கள் ஆட்டு மந்தைகள். அரசமைப்பின் பதிமூன்றாவது சட்டதிருத்தத்திற்கு முன்னர், இந்த நாட்டில் இதுதானே உண்மை நிலையாக இருந்தது. அந்த நிலையே திரும்ப வேண்டும் என்பதுதான் மிலிந்த போன்றோரின் அவா.

### யார் பெரியவன்?

பதிமூன்றின் கீழான அதிகாரங்கள் போதுமா, போதாதா என்று தமிழர்கள் வேண்டுமானால், உலகமே அஸ்தமிக்கும்வரை விவாதம் செய்யலாம். ஆனால், மேற்கூறிய பின்னணியில் அந்த அரசியல் சட்டதிருத்தம் சிங்கள பேரினவாத அரசமைப்பில் உருவெடுத்ததே பெரிய சாதனைதான். அதற்குக் காரணியான இந்தியாவையும், அன்றைய ஜனாதிபதி ஜெயவர்தனேவையும் இன்றளவும் தமிழர் தரப்புகள் குறை கூறுவதும் குற்றம்சாட்டுவதும் ஏற்புடையதல்ல.

காரணம், பதிமூன்று செயல்பாட்டிற்கு வந்த நேரத்திலும் சரி, அதற்கு முன்னர் ராஜீவ்- ஜெயவர்தனே ஒப்பந்த காலகட்டத்திலும் சரி, மிதவாத தமிழ் தலைவர்களுக்கும் விடுதலை புலிகள் அமைப்பிற்கும் இடையே, தம்மில் 'யார் பெரியவன்?' என்ற கௌவரமற்ற கௌரவ போராட்டமே தொடர்ந்தது. இன்றளவும் தமிழர்களுக்கு எந்தவித அரசியல் தீர்வும் கிடைக்காததற்கு முக்கிய காரணம். அதன் வெளிப்பாடுதான்.

மிதவாத தலைவர்களுக்கோ, தங்களை மீறி யாரும் தமிழர் தரப்பில் தலையெடுத்து விடக்கூடாது என்ற எண்ணம். விடுதலை புலிகள் அமைப்பிற்கோ, தமிழர்கள் அனைவருக்கும், தாங்கள் மட்டுமே 'ஏக பிரதிநிதி' என்று உள்நாட்டு-வெளிநாட்டு தமிழர்களும், தென்னிலங்கையும் சர்வதேசமும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற வீம்பு.

அதற்காக விடுதலை புலிகள் காவுகொண்ட தமிழர்கள் ஏராளம். தென்னிலங்கை அரச படைகளிடம் உயிர் கொடுத்த தமிழர்கள் ஏராளம், ஏராளம். எப்படி, அரசும் தென்னிலங்கையும் போர் குற்றங்களுக்கு பொறுப்பு கூறவேண்டும் என்று தமிழர்கள் தொடர்ந்து கோரி வருகிறார்களோ. அது போன்றே விடுதலை புலிகள் அமைப்பின் அநியாயங்களுக்கும் அவர்களே தார்மீக பொறுப்பு ஏற்றுக்கொளள வேண்டும்.

அவ்வாறு நடந்தால் மட்டுமே சர்வதேசம்கூட தமிழர் தரப்பை முழுமையாக நம்பும். தற்போது நடப்பதெல்லாம், தமிழர்களைக் காரணிகளாக்கி, மேலை நாடுகள் இலங்கை அரசுடன் தங்களது புவிசார் அரசியலைத் திணிக்கப்பார்க்கிறார்கள். இதுதான் உண்மை.

### துஸ்பிரயோகம்

புதுடெல்லியில் இருந்து நாடு திரும்பிய சில மாதங்களிலேயே மிலிந்த மொறகொடா, மாகாண சபைவேண்டாம் என்று கூறுவதால், அவர் பின்னால் இந்திய அரசு இருக்கிறது என்று தமிழர்கள் கருது

(11ஆம் பக்கம் பார்க்க..)

# சிங்கள மக்களுக்கு எம்மை பற்றிப் போதிய அறிவில்லை தமிழர்களுடன் உறவு மேம்படாமல் இருக்க அதுவே

## விக்னேஸ்வரன் வருந்துகின்றார்



என்னை கொலை செய்ய கொலைவெறியில் இருந்தசிங்களஇளைஞன் தன் தவறை உணர்ந்து மனம் மாறியதாக நாடாளுமன்றஉறுப்பினர் விக்னேஸ்வரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கேள்வி பதிலி லேயே இந்த விடயத்தை அவர் தெரிவித்தார்.

அந்தக் கேள்வி பதிலில், என்னுடைய சில கேள்வி பதில்களை வாசித்துவிட்டு ஒருபடித்த சிங்கள இளைஞர் என்னுடன்தொலைபேசியில் பேசினார். பேச்சு கிட்டதட்ட பின்வருமாறு அமைந்தது.

இளைஞர் - 'சேர்! உங்களைக் கொல்ல வேண்டும் என்ற கொலை வெறியில் இருந்தேன். என்றாலும்நீங்கள் குறிப்பிட்ட பேராசிரியர்ஆரியரட்ணவின் சிங்கள நூலான 'தெமள பௌத்தயா'வை (தமிழ் பௌத்தர்கள்) வாசித்த பின்னர்தான் உங்கள் கூற்றுக்களின் உண்மையைப் புரிந்து கொண்டேன். உங்களை வந்து சந்திக்க விரும்புகின்றேன்.'

நான் - 'தாராளமாக வாருங்கள்! கொல்ல வேண்டும் என்றாலும் வாருங்கள்! எனக்கு இப்பொழுது 83 வயது (அப்போதைய வயது). தொடர்ந்து இந்த உலகத்தில் இருக்க வேண்டும்என்றஆசை எதுவும் எனக்கில்லை.'

இளைஞர் - :'இல்லைசேர்! நான்வெறும் பேச்சுக்கே அவ்வாறு சொன்னேன்.'

இன்றுவரை அவர் என்னை வந்து சந்திக்கவில்லை. ஆனால் அவர் தமது மனமாற்றத்தை வெளியிட்டமைதான் இந்தக் கேள்வி - பதிலுக்கு முக்கியமானது.

சிங்கள மக்களுக்கு எம்மைப் பற்றிய போதிய அறிவு இல்லாமையே தமிழ் -சிங்கள உறவு இன்றும் மேம்படாமல் இருப்பதற்குக் காரணம் என் றுள்ளது. (05)

# வயலுக்குள் நுழைந்த யானைக்குட்டியை சுட்டுக் கொன்று புதைத்த ஐவர் கைது

அநுராதபுரம் - கல்நெவ பிரதேசத்தில் உள்ள வயலுக்கு வந்த காட்டு யானைக்குட்டியை சுட்டுக் கொன்று இரகசியமாக புதைத்ததாக கூறப்படும் ஐவர் புதன்கிழமை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கல்நெவ பிரதேசத்தை சேர்ந்த 42 முதல் 50 வயதுக்குட்பட்டவர்களாவர்.

5 அடி உயரமுடைய 5 வயது காட்டு யானைக் குட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கல்நெவ பிரதேசத்தை சேர்ந்த 42 வயதுடைய பிரதான சந்தேக நபர் தனது வயலுக்கு வந்த காட்டு யானைக்குட்டியை தனது துப்பாக்கியால்சுட்டுக்கொன்றுள்ளார்.

சந்தேக நபர் உயிரிழந்த யானையின் சடலத்தை அயலவர்களின் உதவியுடன் தனது தோட்டத்திலேயே இரகசியமாக புதைத்துள்ளார் என வனஜீவராசிகள் திணைக்களத்தின் மீகலாவ வனவிலங்குகள் பாதுகாப்பு அதிகாரி ஐ.எம்.ஜி.செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

(05)

காய்கறிகள் பழங்கள் மற்றும் மூலிகைகள் கொண்ட வீட்டு தோட்டம் உங்களுக்காக!
தன்னிறைவான வீடு
GARDENING
வீட்டு தோட்டத்திற்கான வழிவமைப்பு ஆலோசனைகள்
உயிர்வாயு தொட்டி, கூட்டெரு தயாரிப்பு, மண்புழு உரம்
மரக்கறி விதைகள், மரக்கன்றுகள் விநியோகம்
இயற்கை பசளைகள், கிருமி நாசினிகள்
தானியங்கி நீர்ப்பாசன அமைப்புகள்
தேனீ குழு, வளர்ப்பு பெட்டிகள்
தோட்டக்கலை பயிற்சிகள்




தொடர்புகளுக்கு: 076 443 8620
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 250,000/-
பரப்பு 25இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with
Vegitable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




# மெய்ப்பொருள் காண்பதறிவு

இந்த உலகம் பொருள்களால் ஆயது. பொருள்கள் தம்முள் வேறுபட்ட தனித்தன்மைகள் உடையன. சில பொருள்கள் வேறுபட்டு விளங்கினாலும் பிறிதொரு பொருளுடன் ஒன்றும் இயல் புடையன. சில தனித்தன்மை பெற்றே விளங்குவன. மாந்தர் வாழ்க்கை பொருள்களுடன்தொடர்புடையதுவாழ்வின் துறைதோறும் வாழ்வு முழுவதும் பொருள்களுடன் யாதானும் ஒரு உறவு இல்லாமால் வாழ்க்கை அமைவதில்லை; அமையாது; அமைதல் முடியாது. அதனால் தான் திருக்குறள், 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்றது.

பொருள்களால் ஆயது வாழ்க்கை. இந்தப் பொருள்களை பொருளின் தன்மை களை உள்ளவாறறிந்து அப்பொருள் தன்மைக்கு ஏற்பவும் வாழ்க்கைக்குரிய வகையிலும் பயன்படுத்த அறிந்து கொள்ள வேண்டும்.

பொருள்களின் தன்மையறிதலுக்குத் தனித்திறனும் பயிற்சியும், அறிவும் வேண்டும். பல பொருள்கள் தோற்றமான நிலையிலேயே தொடர்ந்து இருப்பதில்லை. மாறும் தன்மை உடையன உண்டு. சில பொருள்கள் நிலையாயின போலத் தோன்றும்; பெயர் பெற்று விளங்கும்.

ஆனால் நிலையில்லாதவனாகிப் போதலும் உண்டு. சில நன்மை தருவது போலக் காட்டி துன்பம் தரும், சில துன்பம் தருவது போலக் காட்டி இன்பம் தரும். சான்றாக நமது உடலுக்கு மெய் என்று பெயர். அனால், இது உண்மையல்ல. காலத்தால் கேடுறுதலாம். சர்க்கரை இனிமையானது. சர்க்கரையால் விளைவது பெருந்துன்பம். வெந்தயம் கசப்பான பொருள். ஆனால் வாழ்க்கைக்கு நலம் தருவது; இன்பம் தருவது.

குளிர்ச்சியானவையாக இருப்பவை சூட்டையே தருகின்றன. சூடாக இருப்பவை குளிர்ச்சியையே தருகின்றது. ஆதலால் பொருளின் தோற்றம் பார்க்காமல் பொருளின் தன்மை, அப்பொருளால் விலையும் பயன் ஆகியன தெரிந்து அதற்கேற்பப் பயன்படுத்தல் வேண்டும். இத்தகு அறிவு சராசரி மனிதர்களுக்குக் கிடைப்பதில்லை. ஞானிகளுக்கே உண்டு. சாதாரண மக்கள் தோற்றதால் கவர்ச்சிக் கப்படுவர். தற்காலிகமானவையாக இருப்பினும் உடனடியாக பலன்களை எதிர்பார்ப்பர். எப்பொருளையும் ஆழ்ந்து நோக்குவதில்லை.

வேளாண்மைக்குப் பயன்படும் இரசாயன உரங்கள் உரமே இல்லை. இரசாயன உரங்கள் ஒருவகைத் தூண்டு சக்தியேயாகும். ஆனால் நமது மக்கள் இவைகளை உரம் என்று நம்பினார்கள்; இந்த உரத்தையே நம்பி,






JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
DOWNLOAD PASSENGER APP
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 0706563213
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

# ஐக்கியங்களின் போர் 2024 தென்மராட்சியில் நடந்தது







தென்மராச்சி ஐக்கியங்களுக்கு இடையில் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் சாவகச்சேரிஜக்கிய அணியினர்கிண்ணத்தை தனதாக்கிகொண்டனர் .

இந்தத் தொடரின் சிறந்த விளையாட்டு வீரராக சாவகச்சேரி ஐக்கிய அணியை சேர்ந்த யதுவும்,சிறந்த பந்து வீச்சாளராக சாவகச்சேரி ஐக்கிய அணியை சேர்ந்த நிதர்சனும் சிறந்த பந்துத் தடுப்பாளராக சாவகச்சேரி ஐக்கிய அணியைச் சேர்ந்த தனுஸும் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

சாவகச்சேரி லவ்லி கூல்பார் முன்றிலில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன, சமூகசேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி மற்றும் சூழகம் அமைப்பு இணைப்பாளர் கருணாகரன் குணாளன் ஆகியோர் கலந்து கொண்டு வீரர்களுக்கான வெற்றிக் கிண்ணத்தையும் பரிசில்களையும் வழங்கி வைத்தனர். கைதடி ஐக்கியம், நாவற்குழி ஐக்கியம், மட்டுவில் ஐக்கியம்,சாவகச்சேரி ஐக்கியம் ஆகிய நான்கு அணிகள் இப்போடியில் பங்குபற்றியிருந்தன. இறுதிப் போட்டிக்கு மட்டுவில் ஐக்கியம், மற்றும் சாவகச்சேரி ஐக்கிய அணிகள் தகுதி பெற்றன.தொடர்சியாக 5 ஆவது வருடம் நடைபெறும் இப்போடியில் முதல் மூன்று வருடமும் கைதடி ஐக்கிய அணியும் கடந்த வருடமும் இவ்வருடமும் சாவகச்சேரி ஐக்கிய அணியும் கிண்ணங்கள் வென்றமை குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# தென்மராட்சி விளையாட்டு அபிவிருத்தி ஒன்றியத்தால் சாதனையாளர் கௌரவம்







தென்மராட்சி விளையாட்டு அபிவிருத்தி ஒன்றியத்தால் திங்கட்கிழமை தைப் பொங்கல்தினத்தன்று மாலை சாவகச்சேரி-மட்டுவிலைச் சேர்ந்த உலக சாதனையாளர் செ.திருச்செல்வம் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

தென்மராட்சி விளையாட்டு அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் கே.சஜிதரன் தலைமையில்,சாவகச்சேரி லவ்லி கூல்பார் முன்றிலில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் விருந்தினர்களாக சமூகசேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி மற்றும் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன ஆகியோர் கலந்து கொண்டு உலக சாதனையாளருக்கான கௌரவம் மற்றும் ஊக்கத்தொகையை வழங்கி வைத்திருந்தனர்.

மட்டுவிலைச் சேர்ந்த 60 வயதான திருச்செல்வம், தைப்பொங்கல் தினத்தன்று 1550கிலோஎடைகொண்டவாகனத்தைதனது தலை முடியின் பலத்தால் 19 நிமிடங்களில் 1500 மீற்றர் தூரம் இழுத்து சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் தனது சாதனையை நிலைநாட்டியிருந்த நிலையில் தென்மராட்சி விளையாட்டு அபிவிருத்தி ஒன்றியத்தின் ஊடாக மேற்படி கௌரவம் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)



## அமெரிக்க ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி ஜோன் கெரியை சந்தித்தார் ஜனாதிபதி!

சுவிற்ஸர்லாந்தின் டாவோஸ் நகரில் உலகப் பொருளாதார மாநாட்டுடன் இணைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் காலநிலை மாற்றம் தொடர்பான அமெரிக்க ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி ஜோன் கெரிக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்கவும் இதன்போது உடனிருந்தார். (05)

## அபுதாபிக்கு தொழிலுக்காகச் சென்ற இளைஞன் இறந்துவிட்டதாக அறிவிப்பு

அபுதாபிக்கு வேலைக்காகச் சென்ற இளைஞன் இறந்துவிட்டார் என குறித்த நபர் தொழில் புரிந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்தஒன்றரைவருடங்களுக்குமுன்னர் அபுதாபிக்கு தொழிலுக்காகச் சென்ற காலி - பத்தேகம, கோனாபினுவல பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய கவிந்து சத்சர என்பவரே இவ்வாறு இறந்து விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் அபுதாபிக்கு தொழிலுக்காகச் சென்று அங்குள்ள ஓர் உணவகத்தில் குறித்த இளைஞன் பணிபுரிந்துள்ளார்.

இந்நிலையில், குறித்த இளைஞன் அவரது குடும்பத்தினருக்கும் நெருங்கிய நண்பர்களுக்கும் தினமும் தொலைபேசி அழைப்பெடுத்து தொடர்பை பேணி வந்துள்ளதுடன் கடந்த 6 ஆம் திகதி முதல் குடும்ப உறவினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்களுக்கு அவரது தொடர்பு எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

இது தொடர்பில் குடும்ப உறவினர்கள் மேற்படி இளைஞன் தொடர்பில் தொழில் புரிந்த இடத்திற்கு தொடர்புகொண்டு கேட்ட போது அவர் இறந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞனுக்கு எவ்வித நோய்களும் இல்லை என்றும் அவர் தொழில்புரியும் நிறுவனத்தில் அவருக்கு எதிராக எந்த பிரச்சனையும் இல்லை என்றும் உறவினர்கள் கூறுகின்றனர்.

இளைஞனுக்குஎன்னநேர்ந்ததுஎன்பதை விரைவில்கண்டறியுமாறும்அந்நாட்டுஅரசும் பொறுப்பானவர்களும் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அரவது உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)




## யாழ்ப்பாண வணிகர் கழகத்தினருக்கும் நீதி அமைச்சருக்கும் இடையில் சந்திப்பு

யாழ்ப்பாணம் வணிகர் கழக உறுப்பினர்கள் மற்றும் நீதி, சிறைச்சாலைகள் நடவடிக்கை மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்சவுக்கிடையிலான சந்திப்பொன்று யாழ்ப்பாணம் மனிப்பாய் வீதி வணிக கழக அலுவலகத்தில் இடம்பெற்றது.

வட மாகாணத்துக்குள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அவர்கள் எதிர்கொண்டுவரும் கஷ்டங்கள் தொடர்பாக இதன்போது வியாபாரிகள் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்கள்.

இதுதொடர்பாக ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் கவனத்துக்கு செலுத்தி தேவையான சட்டதிட்டங்களை பொருத்தமான வகையில் திருத்தியமைத்து பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதாக இதன்போது அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பில் நீதி அமைச்சின் செயலாளர் எ.என்.ரணசிங்க, தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தின் தலைவர் சரித் மாரபே, யாழ்ப்பாண வணிக கழக தலைவர் ஆர்.ஜெயசேகரன் உள்ளிட்ட வியாபாரிகள் சமூகம் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (05)

## தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு உட்கட்சி ஜனநாயகத்தின் வெளிப்பாடு

### கூறுகிறார் சுமந்திரன்



இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் தெரிவானது உட்கட்சி ஜனநாயகத்தை வெளிப்படுத்தும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாங்குளம் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணை ஒன்றுக்காக வருகை தந்திருந்த போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு திருகோணமலையிலே இடம்பெற இருக்கின்றது. இதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன என நானும் அறிகின்றேன்.

நானும் தலைவர் பதவி போட்டியிலே இருக்கும் காரணத்தால் இந்த ஆயத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றமை தொடர்பாக வினவிக்கொண்டு இருக்கிறேன்.

பொதுச்சபையிலே அங்கம் வகிப்பவர்களுக்கான கடிதங்கள் அனுப்பட்டதாக தற்போது பொதுச்சபையிலே இருக்கின்ற பொதுச்செயலாளர் மூலம் அறிந்திருக்கின்றேன். ஆகவே திட்டமிட்டபடி எதிர்வரும் 21ஆம் திகதி இந்தத் தேர்தல் உச்சக் கட்டமாக உட்கட்சி ஜனநாயகத்தை வெளிப்படுத்தும் முகமாக திருகோணமலையில் நடைபெற்று நல்லதொரு முடிவு வருமென நாம் எதிர் பார்க்கின்றோம். - என மேலும் தெரிவித்தார். (05)


யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்ச்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
NCI
CCIY
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
UNITY IS STRENGHT
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILEzone
CCH
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர் Kalaikkathir
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

காலைக்கதிர் Kalaikkathir

# 14 அரசியல் கைதிகளே சிறையில் உள்ளனர்; அவர்களுக்கு நீதிமன்றில் வழக்கு நடக்கிறது

## நீதி அமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்



5 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 14 அரசியல் கைதிகளே உள்ளனர். அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வவுனியா, வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத்திற்கு புதன்கிழமை விஜயம் செய்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, பிரபா மற்றும் கௌதமன் ஆகியோரின் ஏற்பாட்டில் ஆலய பரிபாலனசபை மற்றும் தமிழ் விருட்சம் அமைப்பு என்பவற்றின் ஒழுங்கமைப்பில் திவாகரக் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாட்டில் கலந்து கொண்டார். அதன்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கந்தக்காடு முகாமில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அங்கு புனர்வாழ்வு பெறுபவர்கள், போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் மற்றும் யுக்திய நடவடிக்கையில் கைது செய்யப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். மூன்று பிரிவுகளாக கந்தக்காடு முகாம் இயங்கி வருகின்றது. அங்கு இடம்பெற்ற சம்பவங்களையடுத்து அதன் நிர்வாக அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை இடமாற்றம் செய்யும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. அது இளம் சமுதாயத்தையும் பாதித்துள்ளது. யுக்திய நடவடிக்கை மூலம் போதைப்பொருள் விற்பனை மற்றும் போதைப் பொருள் மாபியாக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. யுக்திய நடவடிக்கையில் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

அத்துடன், அரசியல் கைதிகள் விடயத்தில் 5 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இன்னும் 14 அரசியல் கைதிகளே உள்ளனர். அவர்களுக்கு எதிராக வழக்கு விசாரணைகள் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றன.

மேலும், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பேசப்படுகிறது. யாருக்கு ஆதரவு என கட்சி இன்னும் முடிவு எடுக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியும் தமக்குள் பேசுகிறார்கள். இன்னும் யார் வேட்பாளர் என்பதை உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை. கட்சியுடன் கலந்துரையாடியே அது தொடர்பில் முடிவு எடுக்க முடியும் எனத் தெரிவித்தார். (05)

# அ.தி.மு.க. பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி அமைச்சர் ஜீவன் தொண்டமான் விசேட சந்திப்பு





அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக எதிர்க்கட்சி தலைருமான எடப்பாடி பழனிசாமிக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கும் இடையே சந்திப்பொன்று இடம்பெற்றது.

சென்னையில் உள்ள முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் 'செல்வந்தி' இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் முன்னாள் அமைச்சரும் தமிழக சட்டமன்ற உறுப்பினருமான கடம்பூர் கே. ராஜூவும் பங்கேற்றிருந்தார்.

மரியாதை நிமித்தம் நடைபெற்ற இச்சந்திப்பின்போது எதிர்க்கட்சி தலைவருக்கு பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், மலையகத் தமிழர்களின் மேம்பாட்டுக்காக அ.தி.மு.க. தொடர்ந்தும் குரல் கொடுத்து வருவதற்கு நன்றிகளையும் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களை தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வைக்கும் வகையில் நடத்தப்பட்ட நாம் - 200 நிகழ்ச்சி குறித்தும், எதிர்வரும் 21ஆம் திகதி மலையகத்தில் நடைபெறவுள்ள தேசிய பொங்கல் விழா தொடர்பிலும் அமைச்சர் ஜீவன் தெளிவுபடுத்தினார்.

அதேவேளை, இலங்கைக்கு குறிப்பாக மலையக பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்ளுமாறும் எடப்பாடி பழனிசாமிக்கு, அமைச்சர் ஜீவன் தொண்டமான் அழைப்பு விடுத்தார். (05)

# மரக்கறிகளை விவசாயிகள் கூறும் தொகைக்கே நாம் வாங்குகிறோம்

## நுவரெலியா பொருளாதார மத்திய நிலைய தலைவர் தெரிவிப்பு

நாடு முழுவதும் கரட் உள்ளிட்ட மரக்கறிகளின் விலை என்னவாக இருந்தாலும், விவசாயிகள் கூறும் தொகைக்கே நாங்கள் வாங்குகிறோம், நாங்கள் விரும்பும் தொகைக்கு அல்ல என நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் தெரிவித்தார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இயங்கி வரும் பொருளாதார நிலையங்களின் மொத்த விற்பனை விலை பல்வேறு வகையில் குறிப்பிடப்பட்டாலும், நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்திலேயே குறைந்த மொத்த விலையே காணப்படுவதாக நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் அருணு சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மரக்கறி விலைகள் அதிகரிப்பு மற்றும் மரக்கறி விலைகள் அதிகரிப்பதற்கான காரணங்களை குறிப்பிடும் போதே தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு -

ஏனைய பொருளாதார நிலையங்களில் மரக்கறிகளின் விலை எதுவாக இருந்தாலும் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையமே மிகக் குறைந்த மொத்த விற்பனை விலையைக் கொண்டிருப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

காய்கறி பயிர்ச்செய்கை குறைவதற்கு வானிலை மட்டுமே காரணம் என்று சொல்ல முடியாது.

விவசாய ஒழுங்குமுறை அலுவலர்கள், விவசாய அலுவலர்கள் தங்கள் கடமையை சரிவர செய்வதில்லை.

1980களில் விவசாய ஒழுங்குமுறை அலுவலர்கள், விவசாயத்துறை அதிகாரிகள் சாகுபடி பகுதிக்கு வந்து மண்ணை ஆய்வு செய்து, என்ன விதைகளை நட வேண்டும், என்ன உரம், மருந்துகள் பயன்படுத்த வேண்டும் என விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கினர்.

தற்போது உர விற்பனையாளரின் சீடன் விவசாய ஆலோசகராக உள்ளார்.

இந்த அளவு மருந்தை விற்றால் இந்தத் தொகையை மேலதிகமாக தருகிறோம் என்று அந்த உரக்கடை ஊழியரிடம் பல்வேறு நிறுவனங்கள் விலைபேசுகிறார்கள்.

அடுத்த சிறப்பு என்னவென்றால், தொழில்நுட்பத்தில் மிகவும் நலிவடைந்த நாம், மண்வெட்டி வைத்து விவசாயம் செய்யும் விவசாயிகளை இன்றும் பார்க்கிறோம்.

வெளிநாடுகளில் உள்ள தொழில் நுட்பத்தை இலங்கை விவசாய சமூகத்திற்கு வழங்கி தேவையான விவசாய அறிவை வழங்கினால் இன்னும் வெற்றிகரமான விவசாயத் தொழிலை நாம் பெற முடியும். - என்றார். (05)

# உண்மை என்றோ ஒரு நாள் வெல்லும்

## ஹிருனிகா தெரிவிப்பு

அரசியல், நிதி, ஊடக பலம் அதிகமாக இருந்தாலும் இறுதியில் உண்மை ஏதோவொரு நாளில் வெற்றி பெறும் என்று ஹிருணிகா பிரேமச்சந்திர குறிப்பிட்டார். மறைந்த பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரன் குடும்ப அங்கத்தவர்களால் புதன்கிழமை நடத்தப்பட்ட ஊடகவியலார் சந்திப்பின்போது ஹிருணிகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டவரான துமிந்த சில்வாவுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பொது மன்னிப்பு வழங்கியதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், அவ்வாறு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது தவறு என்று வழங்கப்பட்ட தீர்ப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள இந்தத் தீர்ப்பானது இலங்கை வரலாற்றில் முக்கியமானதொரு தீர்ப்பாகவே நான் பார்க்கின்றேன். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவரால் வழங்கப்பட்ட பொதுமன்னிப்பை சவாலுக்கு உட்படுத்தி பாதிக்கப்பட்ட தரப்பினர் வெற்றிபெற்ற ஒரு சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்தத் தீர்ப்பின் ஊடாக நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் பெரும் செய்தியொன்று வழங்கப்பட்டுள்ளது. அரசியல், நிதி, ஊடக பலம் அதிகமாக இருந்தாலும் இறுதியில் உண்மை ஏதோவொரு நாளில் வெற்றி பெறும் என்பதே அந்தச் செய்தி. நடக்க வேண்டிய அனைத்தும் நிகழ்ந்து ஒன்றுமில்லை என்ற நிலையில் நாம் வெற்றுக்கையுடன் வலுவாக எழுந்து நிற்பதைத் தவிர எமக்கு மாற்றுவழியொன்று இருந்திருக்கவில்லை.

அவ்வாறு வலுவாக எழுந்து நிற்க முடிந்தமையால்தான் நீதிக்கான போராட்டத்தினை நாம் முன்னெடுத்தோம். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் நாட்டு மக்களுக்கு ஒரு விடயத்தினைக் கூற வேண்டியுள்ளது. இந்த நீதிப் போராட்டத்தில் கிடைத்துள்ள வெற்றியானது எனக்கும் எமது குடும்பத்திற்கும் கிடைத்த தனிப்பட்ட வெற்றியல்ல. முழு நாட்டுக்கும் கிடைத்த வெற்றியாகும்.

அதுமட்டுமன்றி அரசமைப்பின் 34ஆவது சரத்தின் கீழ் நிறைவேற்று அதிகாரியொருவருக்கு பொதுமன்னிப்பை வழங்க முடியும். ஆனால் நிறைவேற்று அதிகாரப் பதவியில் அமர்ந்த கோட்டாபயவுக்கு அதனைக்கூட சரிவரச் செய்யத் தெரியவில்லை.

எனது தந்தை படுகொலை செய்யப்பட்டபோது எனக்கு 23 வயதாகும். தற்போது எனக்கு 36 வயதாகின்றது. 13 ஆண்டுகளாக நான் நீதிக்காகப் போரடினேன். 13 ஆண்டுகள் என்பது மிகக் கூடிய காலமாகும்.

நான் 23 வயதுடைய இளம் யுவதியாக சுதந்திரமாக வாழக்கூடிய நிலைமையில் இருக்கவில்லை. தினமும் பாதாள உலகக்குழுவினருடனும், போதைப்பொருள் கடத்தல்காரர்களுடனும் மோதவேண்டிய நிலைமையே இருந்தது.

ஒரு யுவதியாக கேட்கக்கூடிய அனைத்துக் கதைகளையும் கேட்டு விமர்சனங்களுக்கு உட்பட்டு தனியாகவும் குடும்பமாகவும் துன்பப்பட்டு முடிந்துவிட்டது. எனக்கு எவரின் மீதும் குரோதமோ, கோபமோ கிடையாது. அவை அற்றுப்போய் நீண்டகாலமாகிவிட்டது. தனிப்பட்ட வகையில் ஜனாதிபதியின் பொதுமன்னிப்புக்கு எதிராக வழக்கைத் தாக்கல் செய்யவில்லை. ஆனால், நாட்டு மக்களுக்கு நீதித்துறையின் மீதான நம்பிக்கை ஏற்படவேண்டும் என்பதற்காகவே வழக்குத் தாக்கல் செய்தேன். எதிர்காலத்தில் எந்தவொரு ஜனாதிபதியும் தமது எண்ணக்களுக்கு ஏற்ப தீர்மானத்தினை எடுக்க முடியாது - என்றார்.

# கொத்துரொட்டியை உட்கொண்டுவிட்டு உறங்கிய 3 பிள்ளைகளின் தாய் சாவு!

இரவு நேர உணவாக கொத்து ரொட்டியை உட்கொண்டுவிட்டு உறங்கிய 3 பிள்ளைகளின் தாயொருவர் உயிரிழந்துள்ளதாக அங்குருவாதொட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் ஹொரணை பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடைய 3 பிள்ளைகளின் தாயாவார். உயிரிழந்தவரின் உடல் எடை கடந்த 3 வருடங்களாக அதிகரித்து வந்த நிலையில் இவர் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இறந்தவருக்கு நித்திரைக்கு செல்வதற்கு முன்னர் ஒட்சிசன் வாயு இயந்திரத்தை பயன்படுத்துமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் இவர் கடந்த 14 ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் தனது கணவருடன் வெளியில் சென்று கொத்து ரொட்டியை உணவாக உட்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து வீட்டிற்கு வந்த பெண் அவரது ஒட்சிசன் வாயு இயந்திரத்தை பொருந்தி விட்டு உறங்கியுள்ள போது தூக்கத்தில் அதனை கழற்றிவிட்டுள்ளார். இந்நிலையில், அதிகாலை 4 மணியளவில் தனது மனைவியை அவதானித்த கணவர், அவர் தூக்கத்திலிருந்து விழிக்காததால், ஹொரணை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளார். குறித்த பெண், அதிக உடல் எடையால் நுரையீரலில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக ஒட்சிசன் வாயு குறைந்தமையால் சுவாசிப்பதற்கு சிரமப்பட்டு உயிரிழந்துள்ளார் என திடீர் மரண விசாரணையில் தெரியவந்துள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# உண்மையைக் கண்டறிய புதிய ஆணைக்குழுவை நியமிக்க முன்னர் கடந்த காலபரிந்துரைகளை நடைமுறைப்படுத்துக

## ஜனாதிபதிக்கு மனித உரிமை ஆணைக்குழு கடிதம்

இலங்கை அரசாங்கம் மற்றுமொரு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை ஏற்படுத்துவதற்கு முன்னர் கடந்தகாலத்தில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உண்மை, ஐக்கியம், நல்லிணக்கம் குறித்த ஆணைக்குழு சட்ட மூலம் குறித்த தனது அவதானிப்புகள் குறித்து ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் மனித உரிமை ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

உத்தேச உண்மை ஐக்கியம் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு முழுமையானதாக காணப்படலாம் எனினும் இது இலங்கையில் ஆயுதமோதல்களின் போது இழைக்கப்பட்டபாரியமனிதஉரிமைமீறல்கள் குறித்த உண்மைகளைக் கண்டறிவதற்காக ஏற்படுத்தப்பட்ட பல பொறிமுறைகளில் இதுவும் ஒன்று.

அவ்வாறான வன்முறைகளின் போது பாதிக்கப்பட்டவர்கள் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட அமைப்புகளுடன் தங்கள் சாட்சியங்களைப் பகிர்ந்துகொண்டுள்ளனர்.

உதாரணத்திற்குநாங்கள்அவ்வாறானஒரு பொறிமுறையை நினைவுபடுத்துகின்றோம் 2010 இல்உருவாக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழு.

2011 நவம்பரில் இந்த ஆணைக்குழு வெளியிட்ட தனது இறுதி அறிக்கையில் பல பரிந்துரைகளை முன்வைத்தது.

இந்தப் பரிந்துரைகள் கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் தோன்றிய பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானவர்களின்சாட்சியங்களை அடிப்படையாக கொண்டவை.

பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் தங்களின் பயங்கரமான அனுபவங்களை கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் பகிர்ந்துகொண்டனர்.

மேலும் தங்களின் முறைப்பாடுகளின் அடிப்படையில்வெளியான எல்எல்ஆர்சியின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்த்தனர்.

எனினும் இந்த பரிந்துரைகளில் பெருமளவானவை இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் தங்களின் அதிர்ச்சி தரும் அனுபவங்களை மீண்டும் ஒருமுறை பகிர்ந்துகொள்வதை கட்டாயமாக்கும் உண்மையை கண்டறியும் புதிய ஆணைக்குழுவிற்கு வளங்களை ஒதுக்குவதன் முன்னர் கடந்தகாலத்தின் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுக்களின் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

இந்த சட்டமூலத்தில் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதை நாங்கள் கருத்தில் கொண்டுள்ள அதேவேளை கடந்த காலத்தின் உண்மையைஅறியும்ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை கண்காணிப்பதற்காக ஜனாதிபதிசெயலகத்தின் கீழ;உயர்மட்டகுழுவைஏற்படுத்தவேண்டும்.

இந்த குழு உரியநிபுணர்கள் பாதிக்கப்பட்டவர்கள் குழுவின் பிரதிநிதிகள் சிவில் சமூகத்தினர் உள்ளடக்கப்படவேண்டும்.

பாதிக்கப்பட்ட சமூகங்களிற்கு மீண்டும் பாதிப்புகளை ஏற்படுத்தும் மற்றுமொரு பொறிமுறை உண்மையை கண்டறிவதற்கு உதவப்போவதில்லை என நாங்கள் கருதுகின்றோம். முன்னைய ஆணைக்குழுக்களால் உண்மைகள் ஏற்கனவே வெளிக்கொணரப்பட்டுள்ளன என்பதைஅரசாங்கம்ஏற்றுக்கொள்ளவேண்டிய நேரம்இது. மேலும்உண்மைக்கானகூட்டுஉரிமையை நிறைவேற்றுவதற்காக அரசாங்கம் பரந்துபட்ட மக்கள் மத்தியில் அவ்வாறான உண்மைகளைப் பகிர்ந்துகொள்வதற்கு உதவவேண்டும்.

இதன் காரணமாக முன்னைய உண்மையை கண்டறியும் ஆணைக்குழுக்களின் கண்டுபிடிப்புகள் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள ஆரம்பிக்கவேண்டும்.

முன்னைய உண்மையை கண்டறியும் ஆணைக்குழுக்களால் கண்டறியப்பட்ட விடயங்களை முழுமையாக நாட்டிற்கு தெரியப்படுத்துவதற்கான திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என ஆலோசனை முன்வைக்கப்படுகின்றது.

இந்தத் திட்டங்கள் முன்னைய ஆணைக்குழுக்களின் கண்டுபிடிப்புகளை தேசிய பாடத்திட்டத்திற்குள் உள்வாங்கலாம். இது தொடர்பான தேடல்களில் ஈடுபட்டுள்ள எழுத்தாளர்கள் கலைஞர்களிற்கு உதவலாம்.

ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின் மூலம் இதனை நடைமுறைப்படுத்தலாம்.

உண்மை மற்றும் பொறுப்புக்கூறலின் ஒன்றுடன் ஒன்றுசார்ந்திருந்தல் தன்மையை இலங்கையின் தற்போதைய நிலைமாற்றுக்கால நீதி நிகழ்ச்சி நிரலிற்குள் உள்வாங்குவதற்காக( கடந்த காலத்தின் உண்மைமற்றும்நல்லிணக்கஆணைக்குழு உட்பட்ட ஆணைக்குழுக்கள் பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் பாரிய குற்றங்கள் குறித்து குற்றச்சாட்டுகளை சுமத்துதலை பரிந்துரை செய்துள்ளதை கருத்தில் கொள்ளும்போது) முன்னுரிமைக்குரிய விடயமாக அவ்வாறான குற்றச்சாட்டுகள் மீறல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கும் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும்சுயாதீனபொறிமுறையை உருவாக்குமாறு பரிந்துரை செய்கின்றோம்.

அவ்வாறான பொறிமுறை போதியளவு வளங்களையும் நிபுணத்துவத்தையும் கொண்டிருக்கவேண்டும் - தேவைப்பட்டால் சர்வதேச நிபுணத்துவத்தையும் உள்வாங்கலாம். (05)



## நாணய நிதியப் பணிப்பாளரை சந்தித்துப் பேசினார் ஜனாதிபதி

சுவிற்ஸர்லாந்து டாவோஸ் நகரில் நடைபெறும் உலக பொருளாதார மாநாட்டுக்கு இணையாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிரிஷ்டலினா ஜோர்ஜியாவா மற்றும் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கீதா கோபிநாத் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நடைபெற்றது. பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்கவும் உடனிருந்தார். (05)

# நாட்டு நலனைக் கருத்தில் கொண்டே துமிந்தவிற்கு பொது மன்னிப்பாம்

## நீதிமன்றத்தில் சமர்ப்பித்த சத்தியக்கடதாசியில் கோட்டா தெரிவிப்பு



நாட்டின்நலனைக் கருத்தில்கொண்டே துமிந்த சில்வாவிற்கு பொதுமன்னிப்பை வழங்கியதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சத்தியக்கடதாசியில் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தில்சமர்ப்பிக்கப்பட்டுள்ள சத்தியக்கடதாசியில் தனிப்பட்ட அல்லது அரசியல் தொடர்புகள் காரணமாகத்தான் பொதுமன்னிப்பு வழங்கியதாக தெரிவிக்கப்படுவதை முன்னாள் ஜனாதிபதி மறுத்துள்ளார்.

எனக்கு வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கைகளில் துமிந்த சில்வாவை சிறையில் வைத்திருப்பது அவரது உடல்நலத்திற்குபாதிப்பைஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. வேறு பல காரணங்களை முன்வைத்து அவருக்கு பொதுமன்னிப்பை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை எனக்கு விடுக்கப்பட்டமை நினை வில் உள்ளது என கோட்டாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

துமிந்த சில்வாவிற்கு நான் பொதுமன்னிப்பை வழங்கவேண்டியது அவசியம் எனத் தெரிவிக்கும் வேறு பல விடயங்கள் ஆவணங்கள் காணப்பட்டன எனவும் சத்தியக்கடதாசியில் தெரிவித்துள்ள கோட்டாபய, நான் தேசிய நலனை கருத்தில் கொண்டே பொதுமன்னிப்பை வழங்கினேன் எனவும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள சத்தியக்கடதாசியில் தெரிவித் துள்ளார்.

துமிந்தசில்வாவிற்கு வழங்கிய பொதுமன்னிப்பு சட்டபூர்வமானதல்ல என தெரிவித்து நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவில் இந்த சத்தியக்கடதாசியும் இடம்பெற்றுள்ளது. (05)

# ஜனாதிபதி ஒருவருடைய மன்னிப்பு செல்லுபடியற்றது என இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக நீதிமன்று தீர்ப்பு

## ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் பெருமிதம்

இலங்கை சரித்திரத்திலே முதல் தடவையாக ஜனாதிபதிஒருவருடையமன்னிப்புசெல்லுபடியற்றது என நீதிமன்றம் தீர்ப்பளித்து இருக்கின்றது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

புதன்கிழமை முல்லைத்தீவு மாங்குளம் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணை ஒன்றுக்காக வருகை தந்திருந்ததன் பின்னர் ஊடகங்களுக்குக்; கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, துமிந்த சில்வாவிற்கு கொடுத்த மன்னிப்பை புறந்தள்ளி அதுதவறாக - சட்டவிரோதமாக - கொடுக்கப்பட்ட மன்னிப்பு செல்லுபடியற்றது என்று தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது.

பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் கொலை சம்பந்தமாக மரதண்டனைக்கு உட்படுத்தப்பட்ட துமிந்தசில்வாவிற்கே இந்தத்; தீர்ப்பு கொடுக்கப்பட்டது. ஹிருணிகா பிரேமசந்திர சார்பிலே நான் ஆஜராகி இருந்து இந்த வழக்கை வாதாடி இருக்கின்றேன்.

இலங்கை சரித்திரத்திலே முதல் தடவையாக ஜனாதிபதிஒருவருடையமன்னிப்பு செல்லுபடியற்றது என நீதிமன்றம் தீர்ப்பளித்து இருக்கின்றது. இது வரவேற்க வேண்டிய ஒரு விடயம். வேறு சில வழக்குகளும் நிலுவையிலே இருக்கின்றன.

விடேமாக மிருசுவில் படுகொலையாளி சுனில் ரட்நாயக்கவிற்கு கொடுத்த மன்னிப்பையும் நாங்கள் சவாலுக்கு உட்படுத்தி இருக்கின்றோம். அந்த தீர்ப்பு இன்னும் வெளிவரவில்லை என மேலும் தெரிவித்தார். (05)

# ஐக்கிய இராச்சிய பிரபுக்கள் சபை உறுப்பினர் வில்லியமைச் சந்தித்தார் ஜனாதிபதி ரணில்



சுவிற்ஸர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்று வரும் உலகப் பொருளாதார மாநாட்டை முன்னிட்டு ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஐக்கிய இராச்சியத்தின் பிரபுக்கள் சபை உறுப்பினர் வில்லியம் ஹேக்கிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்கவும் இதன்போது உடனிருந்தார்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நீங்களெல்லாம் பொலீஸ்தானா? கொழும்பில் நீதிவான் விளாசல்

கொழும்பு கறுவாத்தோட்டம் பிரதேசத்தில் கடந்த டிசெம்பர் 15 ஆம் திகதி இடம்பெற்ற சங்கீத ஆசிரியையின் கொலை சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளும் கொழும்பு தெற்கு குற்றப் புலனாய்வு பிரிவினரின் செயற்பாடுகளை அவதானித்து கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் உப பொலிஸ் பரிசோதகரிடம் இது பொலிஸ்துறையா என கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான உரிய தகவல்கள் முன்வைக்கப்படாத நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியை எதிர்வரும் 26ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த கொலை சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளின் தகவல்களை உப பொலிஸ் பரிசோதகர் முன்வைத்ததன் பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் சந்தேக நபர் அருகில் உள்ள இரு வீடுகளில் சிசிரிவி கமரா இருப்பதாகவும் அந்த வீட்டு உரிமையாளர்கள் சிசிரிவி காட்சிகளை தரத் தயங்குவதாகவும் உப பொலிஸ் பரிசோதகர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். இந்நிலையில் அந்த சிசிரிவி காட்சிகளானது 14 நாள்களில் அழிந்திவிடுவதாக வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர் என அவர் மேலும் கூறினார்.

இந்த கொலை சம்பவம் தொடர்பான உண்மைகளை பொலிஸார் மறைக்க முயற்சிப்பதாக உயிரிழந்தவர் சார்பாக வழக்கில் ஆஜராகியுள்ள சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதனால் இந்தக் கொலை சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் கொடுக்குமாறு சட்டத்தரணி நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் விசாரித்த நீதிவான் பிரசன்ன அல்விஸ், சிசிரிவி காட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முடியவில்லையா இது பொலிஸ்துறையா என கேள்வி எழுப்பியுள்ளதோடு வழக்கு தொடர்பில் புரிதல் இன்றி நீதிமன்றத்தில் தகவல்கள் முன்வைக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# 2 பொலிஸாரை இலஞ்ச வலையில் சிக்க வைத்தார் கசிப்பு வியாபாரி

10,000 ரூபாவை இலஞ்சமாகப் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

நாரம்மல பகுதியில் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முறைப்பாட்டாளரின் வீட்டை சோதனை செய்து, சட்டவிரோத கசிப்பு கைப்பற்றப்பட்ட நிலையில், அது தொடர்பில் சட்ட நடவடிக்கையைத் தவிர்ப்பதற்காக இந்த இரு பொலிஸாரும் இலஞ்சம் பெற்றமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

செவ்வாய்க்கிழமை மாலை 6.40 மணியளவில் நாரம்மல பகுதியில் உள்ள முறைப்பாட்டாளரின் வீட்டில் வைத்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் குருணாகல் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (05)

# தாதியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக கிழக்கில் வைத்திய சேவைகள் கடும்பாதிப்பு

அரச வைத்தியசாலைகளில் தாதிய உத்தியோகத்தர்கள் புதன்கிழமை ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தம் காரணமாக கிழக்கு மாகாணத்திலுள்ள வைத்திய சேவைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

வைத்திய அதிகாரிகள் கடமைக்கு வருகை தந்திருந்த போதிலும் தாதியர்கள் வருகை தராதமையால் வைத்திய சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

தூர இடங்களிலிருந்து கிளினிக்குகளில் சிகிச்சை பெற வந்திருந்த நோயாளிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது. (05)



# கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா: முன்னாயத்த பணிக்காக அதிகாரிகள் பயணம்







கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், அதற்கான முன்னாயத்த பணிகள் குறித்து ஆய்வு செய்வதற்கான கச்சதீவு நோக்கிய விஜயமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இப்பயணத்தில் நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்பணி பத்திநாதன் அடிகளார், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி), நெடுந்தீவு பிரதேச செயலர் எப்.சி. சத்தியசோதி, யாழ்ப்பாண மாவட்ட செயலக பிரதம கணக்காளர் மற்றும் கடற்படை உயரதிகாரிகள் இணைந்திருந்தனர்.

குறிகாட்டுவான்துறைமுகத்தில் இருந்து கடற்படை படகு மூலம் கச்சதீவு சென்ற இக்குழுவினர், அங்கு திருவிழாவுக்கு வரும் பக்தர்களது தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மேற்கொள்ளவுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தனர். (05)

# தொடர் காய்ச்சலால் ஆசிரியை உயிரிழப்பு

ஐந்து நாள் தொடர் காய்ச்சல் காரணமாக இளம் ஆசிரியை ஒருவர் செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

நாயன்மார்கட்டைச் சேர்ந்த திருமதி சங்கரி மதிரூபக்குருக்கள் (வயது-33) என்ற ஒரு குழந்தையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காய்ச்சல் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்ற நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

ஈமோக்குளோபின் குறைபாட்டால் மரணம் சம்பவித்ததாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# எது அங்கீகாரம்?

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வார்களேயானால், அது தவறு. மிலிந்தாவின் செயற்பாடுகளை வைத்து நோக்கினால், அவர் உள்நாட்டு அரசியலில் மீண்டும் ஒரு சுற்று வர விரும்புகிறார் என்றே தோன்றுகிறது. அதற்கு என்றும் கைகொடுக்கும் இனப்பிரச்சினையை கையிலெடுத்திருக்கிறார். ஏன், அவரது நிலைக்கு, இந்தியாவும் பின்னால் நின்று ஆதரவு கொடுக்கிறது என்பது போன்ற பிம்பத்தை தோற்றுவிப்பதும் அவருக்கு அவசியம்.

இதற்கிடையே, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உருவாக்கிய அறிவுஜீவிகள் குழுவான யுதுகம அமைப்பின் தலைவரான கெவிந்து குமாரதுங்கா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கேவிற்கு எதிராக குற்றச்சாட்டு ஒன்றை வைத்துள்ளார். அண்மையில் யாழ்பாணத்திலும் முன்னர் தலைநகர் கொழும்பிலும் பதிமூன்றாவது திருத்தத்தை செயல்படுத்தப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே தொடர்ந்து பிரகடனம் செய்து வருவதற்கு எதிரான கருத்து அவருடையது.

ஜனாதிபதி தேர்தலில் தமிழர் வாக்குகளை குறிவைத்து ரணில் செய்யும் அரசியல் விளையாட்டு அது என்பது ஒருபுறம் இருக்க, கெவிந்து, இதற்காக ரணிலைக் குறை கூறியுள்ளார். அதாவது, மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ரணில், அவருக்கு முன்னர் பதவி வகித்த கோட்டாவிற்கு மக்கள் கொடுத்த அங்கீகாரத்தை துஸ்பிரயோகம் செய்ய முடியாது என்று கூறியுள்ளார்.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்து கெவிந்துவின் நிலைபாடு என்ன என்பது அனைவரும் அறிந்ததே. தற்போது, ரணிலின் அதிகார வரம்பு குறித்து கருத்து கூறும் அவருக்கும் அவ்வாறு குற்றம்சாட்ட உரிமை இருக்கிறதா, என்றால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிற நாடாளுமன்ற உறுப்பினர்களைவிட குறைவு தான். காரணம், கெவிந்து, ராஜபக்சக்களின் மொட்டுக் கட்சியின் தேசிய பட்டியல் மூலம், அதாவது பின்வாசல் வழியாக மட்டுமே நாடாளுமன்றத்தைச் சென்று அடைந்தவர். அவருக்கும் மக்களால் அன்றி, நாடாளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியின் தகுதி குறித்து பேச உரிமை இல்லை.

கெவிந்து, அரசமைப்பின் அடிப்படையிலேயே நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கிறார் என்பதே உண்மை. தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை அல்ல. எனவே, அவரும் தனக்கு தோன்றிய கருத்துக்களை வெளிப்படையாக பேச உரிமை உண்டு. அவரைப்போலவே, ரணிலும் யாப்பின் அடிப்படையிலேயே அசாதரண சூழ்நிலையில் ஜனாதிபதியாகப் பதவியேற்று தற்போது வரை தொடருகிறார். இதன் காரணமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கோட்டாபயவின் அதிகாரங்கள் அனைத்தையும் ரணில் அனுபவிக்க முடியாது என்று எங்கும் கூறப்படவில்லை.

இதைவிட முக்கியம், பதிமூன்று மற்றும் அதிகாரப் பரவலை, கோட்டாபய எதிர்த்தார் என்ற கெவிந்துவின் கருத்தும் தவறானது. கடந்த 2019 ஜனாதிபதி தேர்தல் பரப்புரையின்போது, அவர் எங்கும் அது போன்ற ஒரு கருத்தை முன்வைக்கவில்லை. அதேசமயம், ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், கோட்டாபய, அரசியல் தீர்வு குறித்துப் பேசினார், தமிழர் தரப்புகளுடனும் பேச்சு நடத்தினார்.

ஏன், புதிய அரசமைப்பை வரைவதற்கான முனைப்புகளைக்கூட முன்னெடுத்தார்.

ஜனாதிபதி கோட்டாவின் முயற்சிகள் எந்த உருவம் எடுத்திருக்கும் என்பதை ஊகிக்க முடியாது. காரணம், தான் அமைத்த நிபுணர்கள் குழு அறிக்கையின் அடிப்படையில், நாடாளுமன்றத்தையே அரசமைப்பு சபையாகவும் செயல்பட செய்வதே அவரது முடிவாக இருந்தது. ஆனால், அதற்கு முன்னரே அவர் பதவி விலகும் சூழ்நிலையை அவரே ஏற்படுத்திக் கொண்டார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.01.2024இல் வெளியிடப்பெற்றது.